வணிகவரித் துறை

மானியக் கோரிக்கை எண் 4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள்
# ஏனைய வரிகள், தீர்வைகள்
# நிருவாகம்

## 2000-2001

©
தமிழ்நாடு அரசு
2000

## மானியக்கோரிக்கை எண்.4

## தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள், நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

## 2000–2001

தோற்றுவாய்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

–திருக்குறள்

( பொருளுரை : தகுதி உடையோர் நலனுக்கு
உதவிடும் பொருட்டே ஒருவன் முயன்று திரட்டிய
பொருள் பயன்பட வேண்டும்.)

---

தமிழ்நாடு அரசு பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் முன்னணியில் திகழ்வதோடு, அத்திட்டங்களுக்கான நிதி ஆதாரங்களைப் பெருக்க வழி முறைகளைக் கண்டறியவும் வேண்டியுள்ளது. வணிகவரித் துறையே நிதி ஆதாரங்களைப் திரட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 1939 ஆம் ஆண்டில்

தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்ட விற்பனை வரிவிதிப்பு, தற்போது மாநிலத்தின் மொத்த வருவாயில் 70 விழுக்காட்டிற்கும் அதிகமாக வருவாய் ஈட்டித்தரும் வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. 1996–97 ஆம் ஆண்டில் இந்த அரசு ஒரு நீண்டகால வரிவிதிப்பு கொள்கையை அறிமுகப்படுத்தியது. இந்த வரிவிதிப்பு கொள்கையானது, பின்வரும் மென்மையான மற்றும் மேன்மையான வரிவிதிப்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு வணிகவரித்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது :–

(1) நியாயமான மற்றும் நடுநிலைமையான முறை.

(2) பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு விளைவிக்காத வகையில், ஆனால் அதே சமயம் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட முறை.

(3) வரி செலுத்துவோர் மற்றும் நிருவாகத்தினர் ஆகிய இரு தரப்பட்டோரும் கடைபிடிக்கும் வண்ணம் எளிதான நடைமுறை.

(4) பொருளாதார வளர்ச்சியுடன் கூடிய வருவாய்ப் பெருக்கம்.



( அரசு வரிவிகித உயர்வு செய்வதன் மூலமேயல்லாமல் பொருளாதாரம் வளர்ச்சியடையும் பொழுது வருவாய் தன்னிச்சையாக பெருக வேண்டுமென்ற அடிப்படையில்).

2. வணிகவரித்துறை பின்வரும் சட்டங்களை நிருவகிக்கிறது :

(1) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959.

(2) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970.

(3) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956.

(4) தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939.

(5) தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம், 1961.

(6) தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம், 1935.

(7) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம், 1981.

(8) தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983.

(9) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம் , 1990.

3. திரு. சி. தங்கராசு, இ.ஆ.ப. ( ஓய்வு ) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு பெரும்பாலான பரிந்துரைகளின் மீது உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

4.வரிவிதிப்பு நிர்வாகம் தொடர்பான நீண்டகாலக் கொள்கை.

மேற்கண்ட கொள்கைகளைச் செயற்படுத்தும் போது, பொதுமக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் மீது விற்பனை வரி விதிக்காவண்ணம் அரசு கவனத்தில் கொண்டு செயல்படுகிறது. அத்தியாவசிய பண்டங்களின் மீது மிகக் குறைந்த அளவில் 4 விழுக்காடு வரி மட்டுமே விதிக்கப்படுகிறது. ஆடம்பரம் என கருதப்படும் பொருட்கள் மட்டுமே அதிகபட்ச வரி விகிதத்திற்கு உள்ளாகிறது.



5. 1996–97 ஆம் ஆண்டு முதல் முக்கிய கொள்கையாக நமது வரிவிதிப்பில் பின் பற்றிவரும் அம்சங்களாவன :–

(1) வரி வீதங்களில் அதிக அளவில் வெளிப்படைத் தன்மையையும், வரி விதிப்பு மற்றும் வரிவசூலில் எளிமையையும் அளிக்கும் நோக்குடன் வரி வீதங்கள் மற்றும் வரி படி முறைகளைச் சீரமைத்தல் ;

(2) வரி விதிப்பில் நவீன முறைகளையும், நடவடிக்கைகளையும் அதிக அளவில் அறிமுகப்படுத்துதல் ;

(3) வரி விலக்கு, இணக்க வரி மற்றும் சுயவரி விதிப்பு போன்ற வரி விதிப்பு நடைமுறைகள் என்ற வகையில், பெரும் எண்ணிக்கை யிலான சிறு வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல் ; மற்றும்

(4) அன்றாடம் பொதுமக்கள் பயன்படுத்தும் வீட்டு உபயோகப் பொருட்களின் மீதுள்ள வரிச்சுமையினைக் குறைத்தல்.

**6.** அரசின் நீண்ட கால வரிவிதிப்புக் கொள்கையின் அடிப்படையில் நிதிநிலை பற்றாக்குறை இருந்தபோதிலும், பொது மக்கள் நலனையும், தொழில் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, கடந்த 5 ஆண்டுகளாக பல்வேறு பொருட்களுக்கு வரிச்சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. ஆண்டு வாரியாக அளித்த வரிச்சலுகை விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1996–97 | ரூ. | 353 கோடி |
| 1997–98 | ரூ. | 143 கோடி |
| 1998–99 | ரூ. | 81 கோடி |
| 1999–2000 | ரூ. | 25 கோடி |
| 2000–2001 | ரூ | 76 கோடி ( சுமார்) |
| மொத்தம் | ரூ. | 678 கோடி |

முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை, தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையில் கணக்கிட்டால் இந்த ஐந்து ஆண்டுகளில் ஏறத்தாழ 2700 கோடி ரூபாய் அளவிற்குச் வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.



7. பொருளியல் வல்லுநர், டாக்டர் இராஜா செல்லையா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஆராயப்பட்டு நிதியமைச்சர்கள் கொண்ட குழுவில் விவாதிக்கப்பட்டது. அவர்கள் ஒருமித்த கருத்தினை மேற்கொண்டு பின்வரும் பரிந்துரைகளை அளித்தனர்:—

1) வரி கட்டமைப்பை சீர்படுத்துதல் மற்றும் எளிமைப்படுத்துதல்.
2) மாநிலங்களுக்கிடையேயான வரிவிகிதத்தை சுமுகமாக்குதல்.
3) மதிப்பு கூட்டுவரியை படிப்படியாக நடைமுறைப்படுத்துதல்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வருவாய் ஈட்டித் தருவதில் விற்பனை வரியே முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், தத்தம் மாநிலங்களில் வணிக நடவடிக்கைகளைப் பெருக்குவதற்காக மாநிலங்கள் நடத்தும் விற்பனைவரி விகிதப் போட்டிகளால், வரி வருவாயைப் பெருக்குவதில் தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. தொழிலகங்களை

ஈர்க்கவும், புதிய தொழிற்சாலைகளைக் கவரவும், பல்வேறு விதமான விற்பனை வரிச் சலுகைகளை அளித்து அதன் மூலமாக தங்களுடைய மாநிலமே முதலீட்டார் நட்புடமைக்கு உகந்த மாநிலமாக திகழ, மாநிலங்களுக்கு இடையே பலத்த போட்டி நிலவியது. இவ்வாறு மாநிலங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு மாநிலங்கள் விற்பனை வரி தொடர்பான சலுகையாக, 14 வருடங்கள் வரை வரி தள்ளிவைப்பு அல்லது 7 வருடங்கள் வரை வரித் தள்ளுபடி போன்ற சலுகைகளை அளிக்கத் தொடங்கின. இவ்வகையான நடவடிக்கைகள், பெரும்பாலான மாநிலங்களுக்கு வரி வருவாய் பாதிக்கப்பட்டதுடன், வேண்டிய நிதி ஆதாரநிலையில் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில், 16.11.99 ஆம் நாளன்று தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனத்தால் கூட்டப்பட்ட கூட்டத்தில் அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் நிதியமைச்சர்கள் ஒன்று கூடி, வரிவிகிதம் மற்றும் வரிச் சலுகைப் போட்டிகளை அகற்றவும், நாடு முழுவதும் சமச்சீர் வரித் தளம்



உருவாக்கி, அதற்கும் கீழான வரி வீதம் இல்லாவண்ணம் செயல்படுத்தி அனைத்து வரிச் சலுகைகளையும் நீக்கிட ஒருமனதாக முடிவெடுத்தனர். இதனை நடைமுறைப் படுத்தும்பொழுது மாநில அரசுகள் நேர்மையான மற்றும் நடுநிலைமையான செயல்பாடுகள் மூலம் போதுமான வருவாயைத் திரட்டி பொருளாதாரத்தில் முன்னேற்றமும், அதிக அளவில் வேலை வாய்ப்பினையும் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டத்தினை முடித்து வைக்கையில், மத்திய நிதி அமைச்சர் அவர்கள் ஒருமித்தக் கருத்து அடிப்படையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த விவரங்களை பின்வருமாறு அறிவித்தார் :–

(1). மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் சமச்சீர் தளவரி விதிப்பு முறையினை செயல்முறைப்படுத்துதல்:– சமச்சீர் தள விற்பனை வரியினை அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் 1.1.2000 முதல் செயல்படுத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

(2) வரிச்சலுகைக்குத் தகுதியாகும் "பிற்பட்ட பகுதி'' க்கு உள்ள திருத்திய விதி உட்பட வரி ஊக்குவிப்புத் திட்டங்களை அறவே நிறுத்துதல்:– அனைத்து மாநிலங்களும் தொழிற்சாலைகளுக்கு விற்பனை வரிகளின் அடிப்படையில் வரிச்சலுகைகள் வழங்குவது அல்லது அனுமதியளிப்பது 1.1.2000 முதல் நிறுத்தப்படவேண்டும்.

(3) மாநில அரசுகளால் மதிப்புக்கூட்டு வரியினை நடைமுறைப்படுத்துவதற்கான காலவரம்பு மற்றும் வழிமுறைகளை இறுதியாக்குதல்:– 1.4.2001–ஆம் நாள் முதல் மதிப்புக்கூட்டு வரியினை அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களால் நடைமுறைப்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது . இதற்கு இடைப்பட்ட காலத்தினை, இதற்கான முன்னேற்பாடுகளை செய்வதற்காகவும், கணினி மயமாக்குதல் மற்றும் விளம்பரம் உள்ளடக்கிய பயிற்சிக்காகவும் பயன்படுத்தப்படவேண்டும். மேற்கூறிய நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை மத்திய அரசு,



புதுதில்லியிலுள்ள, தேசிய பொதுநிதி மற்றும் கொள்கை நிறுவனம் மூலமாக அளிக்கும். மதிப்புக் கூட்டு வரியினை அறிமுகப்படுத்துவதால், துவக்க காலத்தில் மாநிலங்களுக்கு ஏற்படும் வரிவருவாய் இழப்பினையும் மத்திய அரசு ஈடுசெய்யும்.

(4) மத்திய விற்பனை வரிகளைச் சீர்ப்படுத்துதல் :–

சேவை வரி, அனுப்பீடு வரி (Consignment Tax) மற்றும் அறிவிக்கப்பட்ட பொருட்கள் மீதான வரிகள் மாநில அடிப்படையில் சார்ந்துள்ளதால் மத்திய வரி விதிப்பு திட்டத்தினை மேலும் ஆய்வு செய்ய வேண்டியுள்ளதால் புதுதில்லியிலுள்ள தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனம், மேற்கூறிய பொருளை ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

<u>(I) சமச்சீர் வரிவிதிப்பு முறை :–</u>

அனைத்து மாநிலங்களும் சமச்சீர் வரியினை செயல்படுத்தினால், வரி விதிப்புப் போட்டியின்றி தொழில் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிக்கவும், மாநிலத்திற்கான

வருவாயை உயர்த்துவதற்கும் ஏதுவாயிருக்கும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை அடிப்படையில், நம் மாநிலத்தில் பல்வேறு பொருட்களுக்கான வரி விகிதத்தில் மாற்றங்கள் செய்வது இன்றியமையாததாகிவிட்டது.

23.1.2000 முதல் சமச்சீர் வரிவிதிப்பு முறையால் மாற்றம் செய்யப்பட்டவை :–

- தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள், பழுதடைந்த மற்றும் தேய்ந்த நகைகளின் மீதான வரிவிகிதம் 0.5 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மோடம், ஸ்பீக்கர் அதன் துணை பாகங்கள் மற்றும் தடையிலா மின் வழங்கும் அமைவுகள் ஆகியவைகளுக்கு வரிவிகிதம் 2 விழுக் காட்டிலிருந்து 4 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மின்னணுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் சிறிய மின்னியல் மாற்றமைவுகள் மீதான வரி



விகிதம் 2 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் இப்பொருட்களுக்கு 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக 1.4.2000 முதல் குறைக்கப்பட்டது.

ரொக்கம் பதிவு செய்யும், அட்டவணைப்படுத்தும், கணக்கிடும் மின்னணு பொறிகள் போன்ற மின்னணு சாதனங்கள், படிபெருக்கி பொறிகள், மின்னணு அமைப்பு பொறிகள், மின்னனு தொலையச்சுப் பொறிகள், மின்னணு தட்டச்சுப் பொறி, கிராம்போன் ஒலித்தட்டை இயக்கச் செய்யும் அனைத்துவகை கருவிகள், ஒளிப்பேழை படம் காட்டும் மற்றும் படம் பதிவு செய்யும் கருவிகள், தொலைக்காட்சிப் படம் எடுக்கும் கருவிகள் மற்றும் படம் காட்டும் கருவிகள், டிரான்ஸிடர் மற்றும் கையடக்க வானொலிப்பெட்டி ஆகியவற்றின் மீதான

விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

- மின்னணு விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சந்தனமர எண்ணெய் மீதான வரி விகிதம் 4 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகவும், சந்தன கட்டை மீதான வரி விகிதம் 8 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகவும் உயர்த்தப் பட்டுள்ளது.
- தொலைக்காட்சிப் பெட்டிகள் மீதான வரி 10 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக உயர்த்தப் பட்டுள்ளது.
- ஒட்டுப் பசைகள், காற்றூட்டப்பட்ட பானங்கள், புட்டிகளில் அடைக்கப்பட்ட மென்மையான பானங்கள், வானூர்திகள் அதன் உதிரி பாகங்கள், திரைப்படக் கருவிகள், கடிகாரங்கள், மாட கடிகாரங்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் வெட்டுக்கரணங்கள் , உலர்ந்த பழங்கள்,



பேரீச்சம் பழங்கள், மத்தாப்பூ மற்றும் பட்டாசு வகைகள், உரோமம், மற்றும் தோலுடன் கூடிய உரோமம், தோல் பொருட்கள் ( காலணி தவிர ), இலகு மேல் கூரைத் தகடுகள், மோட்டார் வாகனங்கள், பிவிசி குழாய்கள், இரப்பர் பொருட்கள், ஒலி அனுப்புச் சாதனங்கள், மற்றும் கம்பியில்லா செய்தி பெறும் மற்றும் அனுப்பும் சாதனங்கள் ஆகியவைகளின் மீதான வரிவிகிதம் 11 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

10.1.2000 மற்றும் 16.1.2000 ஆகிய நாட்களில் புதுடெல்லியில் நடைபெற்ற வரிச் சீரமைப்பு தொடர்பான மாநில நிதி அமைச்சர்கள் அடங்கிய கூட்டத்தில் அத்தியாவசியத் தேவைக்கு பயன்படக்கூடிய பொருட்கள் மீதான வரியை குறைக்குமாறு அந்த குழுவினை இந்த அரசு வலியுறுத்தியது. இந்த அரசு வலியுறுத்தியதை நிலைக்குழுவும், மத்திய அரசும் ஏற்றுக்

கொண்டு பின்வரும் பொருட்களின் வரி விகிதத்தை குறைத்துள்ளது:–

அ. பூஜ்யம் விழுக்காட்டிற்கு கொண்டு வரப்பட்ட பொருட்கள் :

| வரிசை எண் | பொருட்கள் |
|---|---|
| 1 | முறையாக பதப்படுத்தப்பட்ட பால் |
| 2 | வணிகச்சின்னம் உள்ள ரொட்டி |
| 3 | பதனம் செய்யப்பட்ட உப்பு |
| 4 | அடுப்புக்கரி |
| 5 | கோழி மற்றும் கால்நடை தீவனம் |
| 6 | பூண்டு மற்றும் இஞ்சி |
| 7 | சூரிய மின்சார தயாரிப்பு சாதனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் |
| 8 | கையினால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள் |
| 9 | விறகு |
| 10 | விவசாய கருவிகள் |
| 11 | கையினால் நீரேற்றும் குழாய் மற்றும் உதிரி பாகங்கள் |
| 12 | அலுமினிய பாத்திரங்கள் |
| 13 | அகர்பத்தி |
| 14 | கல்வி சார்ந்த எழுது கருவிகள் |
| 15 | உயிர்காக்கும் மருந்துகள் |
| 16 | கச்சாப்பட்டு |
| 17 | இரப்பர் மற்றும் பிளாடிக் காலணிகள் மற்றம் ஷுக்கள் உயர்ந்த பட்ச கடைசி விற்பனை விலை ரூ.200 க்கும் அதற்குக் கீழும் இருப்பின் |
| 18 | மஞ்சள் |
| 19 | புளி |
| 20 | மிளகாய் |



ஆ. 4 விழுக்காட்டிற்கு கொண்டுவரப்பட்ட பொருட்கள் :

| வரிசை எண் | பொருட்கள் |
|---|---|
| 1 (அ) | பின்வரும் தொழிலக இடுப்பொருட்கள் :– கந்தகம், துத்தநாகம் மற்றும் அலுமினியம் போன்ற இரும்பு அல்லாத உலோகம் |
| (ஆ) | வார்பட்டை (Belting) |
| (இ) | உருள் பரல்கள் (Bearing) |
| (ஈ) | பாரைட்டுகள் ஹைட்ரஜன் பெராக்சைடு, சிலிக்கான் கார்பைடு, சுண்ணாம்பு, காஸ்டிக் சோடா மற்றும் பெரோ சிலிக்கான் போன்ற இரசாயன பொருட்கள் |
| (உ) | சாயங்கள் |
| (ஊ) | இரும்பு கலப்பு உலோகம் மற்றும் உயர் வகைக் கலப்பு உலோகம் |
| (எ) | கடும் வெப்பம் தாங்கும் ஊதுலைக் கற்கள் (Refractory Bricks) |
| (ஏ) | மின்மாற்றி (Transformers) |
| (ஐ) | பாலிஸ்டெரின் |

| | |
|---|---|
| 2 | கணினி |
| 3 | இயந்திர கலப்பை மற்றும் அறுவடை இயந்திரம் |
| 4 | வாசனைப் பொருட்கள் (Spices) |
| 5 | அனைத்து வகை இழைகள் |
| 6 | தையல்நூல் |
| 7 | மருந்து வகைகள் (Bulk Drugs) |
| 8 | உலர்ந்த பழங்கள் |
| 9 | தகவல் தொழில் நுட்ப பொருட்கள் |
| 10 | கப்பல் (கப்பல் கட்டுமானம்உள்ளிட்ட) |
| 11 | நீரேற்று இயந்திரங்கள் மற்றும் எண்ணெய் இயந்திரங்கள் |
| 12 | ஊதுலைக் கற்கள் உள்ளிட்ட அனைத்து வகை செங்கற்கள் |
| 13 | நிலக்கீல் (தார்) கூரை வேய்தல் |

<u>இ. 8 விழுக்காட்டிற்கு கொண்டு வரப்பட்ட பொருட்கள்:</u>

| வரிசை எண் | பொருட்கள் |
|---|---|
| 1 | பிளாஸ்டிக் பொருட்கள் |
| 2 | மின்விசிறி உள்ளிட்ட அனைத்து வகை மின்சார பொருட்கள் மின்மாற்றி நீங்கலாக |
| 3 | வகைப்பாடு ஒன்றில் குறிப்பிடப்படாத காலணிகள் |
| 4 | அனைத்து வகையான அறை கலன்கள் (Furniture) |



| | |
|---|---|
| 5 | வகைபாடு ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிடப்படாத மருந்துகள் |
| 6 | அனைத்து வகை வடங்கள் (Cables) |

<u>**II.** விற்பனை வரியினை அடிப்படையாக கொண்டு தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்படும் ஊக்குவிப்பு திட்டங்களை நிறுத்துவது</u> :

மாநில மற்றும் யூனியன் பிரதேச முதலமைச்சர்கள்/நிதியமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட ஒருமித்த கருத்தினை அரசு கவனமாக ஆராய்ந்து விற்பனை வரியை அடிப்படையாக கொண்டு தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுவரும் விற்பனை வரி தள்ளுபடி திட்டங்களை பின்வருமாறு அறவே நிறுத்தலாமென முடிவு செய்யப்பட்டது :–

(i) 23.1.2000 முதல் எந்தவொரு தொழிற் சாலைக்கும் புதிய ஊக்குவிப்பு சலுகை வழங்கக் கூடாது.

(ii) தற்போது அளிக்கப்படும் ஊக்குவிப்புகள் அதன் தகுதி காலம் வரை தொடர்ந்து இருக்கலாம் ; மற்றும்

(iii) தற்போது புதியதாக தொடங்கப் பட்டுவரும் தொழிலகங்கள், ஊக்குவிப்பு சலுகை பெறுவதற்கு பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :–

(அ) தொழிலகங்கள், மாநில/ மத்திய அரசின் தொழில் துறையில் பதிவு செய்திருக்கப்பட வேண்டும் ;

(ஆ) தொழிற்சாலைக்கான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது நிலம் வாங்கியிருக்க வேண்டும்;

(இ) தொழிற்சாலை நிதி உதவிக்காகமுறையான நிதி நிறுவனத்திடம் விண்ணப்பித்––திருக்க வேண்டும்.



(ஈ) 23.1.2000–த்திலிருந்து உற்பத்தியை இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக தொடங்கிடவேண்டும்.

தற்போது இயங்கிவரும் தொழிற்சாலைகள் விரிவாக்கம் மற்றும் மாற்றியமைப்பு மேற் கொண்டால், 23.1.2000–க்குள் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை வாங்கியிருக்கவேண்டும். அவை 22.1.2001–க்குள் வணிக உற்பத்தியை துவங்கவேண்டும். இந்நிபந்தனைகளைப் பூர்த்திச் செய்யும் விரிவாக்கம் / மாற்றியமைப்பு தொழிற்சாலைகளே வரி ஊக்குவிப்பு சலுகைகளைப் பெற தகுதி உடையவையாகும்.

<u>(3) மதிப்புக் கூட்டு வரி :</u>

நமது மாநிலத்தில் 1.11.1996 முதல் மதிப்புக்கூட்டு வரி விதிப்பு அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படி, ஒரு வணிகரின் மொத்த விற்பனைத்தொகை ஓர் ஆண்டிற்கு ரூபாய் 75 இலட்சத்திற்கு மிகைப்படின், பொருள்களின் மறு விற்பனைத்தொகையின் மீது, சம்பந்தப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரி செலுத்துதல் வேண்டும். ஆனால், வணிகர்கள்

இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், இவ்வரிவிதிப்பினை நிறுத்தி வைக்க அரசு தீர்மானித்து, 1.11.1996 முதல் 31.3.2000 வரை உள்ள காலத்திற்கு மதிப்பு கூட்டுவரி விலக்கு அளித்தது. தற்போது, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச முதலமைச்சர்கள் நிதியமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட ஒருமித்த கருத்தின் அடிப்படையில் மேற்கொண்ட முடிவின்படி இந்த மதிப்புக் கூட்டுவரி விலக்கை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்க முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே 31.3.2001 வரை நீட்டித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

<u>(4) மத்திய விற்பனை வரி விதிப்பு முறையில் சீர்திருத்தங்கள் :</u>

புதுடெல்லியுள்ள தேசிய மற்றும் பொது நிதிகொள்கை நிறுவனம் இப்பொருள் மீது மேலும் ஒரு ஆய்வினை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து இதன் மீதான ஒருமித்த கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.



<u>**8. 2000–2001 க்கான நிதி ஆண்டில் 1.4.2000** முதல் பின்வரும் மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன:–</u>

<u>**I.** வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள இனங்கள்</u>

<u>(அ) மக்கள் நலன் தொடர்பானவை</u>

*நித்தியகல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (cord) , அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி,வணிகச்சின்னமில்லாத காய்கறி வத்தல்கள் மற்றும் உறையவைக்கப்பட்ட விந்து ஸ்டிரா ஆகியவைகள் மீது விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

*அரசு , பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிந்த அலுவலர்கள் ஓய்வு பெறும்போது பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரும் மோட்டார் வாகனங்களின் மீதான

நுழைவு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

(ஆ) தொழிற்துறை தொடர்பானவை

தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

II. குறைக்கப்பட்ட வரி விகிதங்கள்

(அ) மக்கள் நலன் தொடர்பானவை

* அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி கடைசி கொள்முதலின் போது 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.



- பேஜர்கள், செராமிக் கற்கள் (ceramic bricks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (bleached liquid) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- வறுகடலை மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- ஓமியோபதி மற்றும் ஆயுர்வேத மருந்துகள் மீதான வரி 4.4.2000 முதல் 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

(ஆ) தொழில் துறை தொடர்பானவை :–

- மொசைக் கற்கள், செராமிக் சுவர் மற்றும் தள ஓடுகள் மற்றும் பளிங்குக் கற்கள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்ட முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 3–ல் உள்ள செராமிக் துப்புரவுக் கலன்கள், வரிசை எண். 5–ல் உள்ள இஸ்திரிப்பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீடு மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மற்றும் வரிசை எண்.7–ல் உள்ள அனைத்து வகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக் காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.
- முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண்.6–ல் உள்ள அனைத்து வகை மின்சக்தி பொருட்கள் மீதான விற்பனைவரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.



- உருளைகள் ( bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப் படுகிறது.
- மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

( மேற்கண்ட பொருட்களின் வரிவிகிதங்கள் அண்டை மாநிலங்களை விட அதிகமாக இருப்பதால் வணிகம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு வரி குறைப்பு செய்யப்படுகிறது. அதனால் வரி இழப்பு ஏற்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏற்படும் வருவாய் மாற்றங்கள் ஆறு மாத காலத்திற்குப் பின் ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட பொருட்களில் வரி இழப்பு ஏற்படுமாயின், அவற்றில் தக்க மாற்றம் செய்யப்படும்).

- மின்வாரியம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மற்றும் இந்திய மின்சார சட்டம்,

1910–ன்கீழ் உரிமம் பெற்ற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் போன்ற நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

- திரைப்படங்கள் குத்தகை மீதான விற்பனை வரி 1.4.2000 முதல் அறவே நீக்கப்பட்டது.

**III.** வணிக சமுதாயம் தொடர்பானவை :–

- வணிகர்கள் பதிவு சான்று பெற விண்ணப்பித்தால் ஒருவார காலத்திற்குள் சான்று வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.
- வணிக உரிமங்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கத் தகுதியுள்ள அனைத்து வணிகர்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு புதுப்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.



- வணிகர்களுக்குத் தேவையான சில படிவங்களை வணிகவரித்துறை அலுவலகத்தில் பெறுவதில் உள்ள தாமதங்களைத் தவிர்க்க வணிகர்கள் தாங்களே அச்சடித்த படிவங்களை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேல், ஆனால் ரூபாய் பத்து இலட்சத்திற்குக் குறைவாக வியாபாரம் செய்த வணிகர்கள், முதல் மூன்று இலட்சம் வரை உள்ள விற்பனை மீது வரி வசூல் செய்திராவிடில், அத்தொகையின் மீது செலுத்தவேண்டிய விற்பனை வரி ரத்து செய்யப்படுகிறது.
- சுயவரி விதிப்புக்குத் தற்போதுள்ள உச்சவரம்பான ரூபாய் 20 இலட்சம், ரூபாய் 1 கோடியாக அதிகரிக்கப்பட்டு, இத்தொகை வரை மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் அனைவருக்கும் பதிவு பெற்ற பட்டயக்

கணக்கர் (Chartered Accountant) தணிக்கைச் சான்றிதழின் அடிப்படையில் வரிக்கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரிவிதிப்பு ஆணை பிறப்பிக்கப்படும். இதில் கணிப்பொறி மூலம் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு செய்யப்படும்.

**IV.** கூடுதல் வருவாய் வரும் இனங்கள்

❖ 2000–2001 ஆம் நிதியாண்டில், கூடுதலான வருவாயை பெருக்கும் வகையில் பின்வரும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :–

- ஒரு லிட்டர் அதிகபட்ச சில்லறை விலை ( Maximum Retail Price ) ரூ.29–ம் அதற்கு மேலும் உள்ள மென் பானங்களுக்கான விற்பனை வரி 1.4.2000 முதல் 12 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.



**V. 2000–2001 ஆம் ஆண்டுக்காக அறிவிக்கப்பட்ட சில முக்கிய மாற்றங்கள்**

- பரிசுச் சீட்டு விற்பனை மீதான இணக்க வரி செலுத்தும் வணிகர்களுக்கு இருந்த விருப்பத்தேர்வு ரத்து செய்யப்பட்டு அனைத்து லாட்டரிச் சீட்டு வணிகர்களும் இணக்க முறையிலேயே வரி செலுத்த வகை செய்யப்படுகிறது. இணக்க வரி வீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்படுகின்றன :–

| | தற்போதைய வரி | மாற்றியமைக்கப் படும் வரி |
|---|---|---|
| வாராந்திர குலுக்கல் | ரூ.10,000 | ரூ.20,000 |
| மாதமிரு முறை குலுக்கல் | ரூ.15,000 | ரூ.25,000 |
| மாதாந்திர குலுக்கல் | ரூ.25,000 | ரூ.40,000 |

மாதாந்திர
சிறப்பு குலுக்கல் ரூ.40,000 ரூ.60,000

விழாக்கால
சிறப்பு குலுக்கல் ரூ.60,000 ரூ.1,00,000

- அறை வாடகை தினம் ரூ.200–க்கு மேல் உள்ள தங்கும் விடுதிகள் மீதான 20 விழுக்காடு ஆடம்பர வரி 1.4.2000 முதல் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டது :–

(அ) ரூ.200–ம் அதற்கு மேலும் , ஆனால் ரூ.500 க்கு குறைவாகவும் நாளொன்றுக்கு அறை ஒன்றுக்கு வாடகை இருப்பின்
– 15 விழுக்காடு

(ஆ) ரூ.500–ம் அதற்கு மேலும், ஆனால் ரூ.1000 க்கு குறைவாகவும் நாளொன்றுக்கு அறை ஒன்றுக்கு வாடகை இருப்பின்
– 20 விழுக்காடு



(இ) ரூ.1000–ம் மற்றும் அதற்கு மேல் நாளொன்றுக்கு அறை ஒன்றுக்கு வாடகை இருப்பின்
– 25 விழுக்காடு

- கேபிள் டி.வி. மீது விதிக்கப்பட்ட கேளிக்கை வரி வசூலை அதிகரிக்கவும், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி ஆதாரம் ஒன்றை அளிக்கவும், தற்போது கேபிள் டி.வி. நடத்துபவர்கள் மீது தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கேளிக்கை வரி விகிதத்திற்கு மிகாமல் உள்ளாட்சி அமைப்புகள் தாங்களே கேளிக்கை வரி விதித்து வசூல் செய்துகொள்ள அனுமதியளிக்கப் படும்.

- தற்போது கேளிக்கை வரிச்சட்டப் பிரிவு 4–ன் கீழ் வசூலின் அடிப்படையில் வரி செலுத்தும் மாநகராட்சிப் பகுதி திரையரங்கு தாரர்கள் விருப்பப்படின் இணக்கவரி செலுத்த வகை செய்யப்படுகிறது. அவர்கள் மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் Gross Collection Capacity) 22 விழுக்காடு 25 காட்சிகளுக்கென கணக்கிட்டு இணக்க வரி வாராந்தோறும் செலுத்தலாம். சிறப்புத் பகுதி நகராட்சிப் பகுதி திரையரங்குதாரர்கள் மொத்த இருக்கைகளின் மீதான மொத்த வசூல் தொகையில் 21 விழுக்காடு 25 காட்சிகளுக்கென கணக்கிட்டு



இணக்கவரி வாரந்தோறும் செலுத்தலாம்.

- 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டப்பிரிவு 4–ன் கீழ் வரி செலுத்தும் திரையங்குதாரர்கள் புதிய திரைப்படங்களின் மீது செலுத்தும் கேளிக்கை வரி 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப் படுகிறது. மேலும் பிரிவு 5–A மற்றும் 5–B –ன் கீழ் உள்ள இணக்கவரியும் இதற்கு இணையாக குறைக்கப்படுகிறது.

**<u>VI. சமாதான் திட்டம் :</u>**

வணிகவரி தொடர்பான பல மேல்முறையீடுகள், பல்வேறு மேல்முறையீட்டு மன்றங்களில் பல ஆண்டு காலமாக நிலுவையில் உள்ளதால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் பெருமளவில் நிலுவையில் இருந்தது. எனவே

மேற்படி நிலுவைத்தொகையின் பெரும்பகுதியை வசூலிக்கும் வகையில் " சமாதான் திட்டம்" ஒன்றினை இந்த அரசு அறிமுகப்படுத்தியது. மேற்படி திட்டத்தின் வாயிலாக 1647 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டதில், ரூபாய் 19.27 கோடி வரி வசூல் செய்யப்பட்டது. இத்திட்டம் 30.9.99 வரை மட்டுமே செயலாக்கத்தில் இருந்தது.

9. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும் :

I. வரிவிதிப்புப் பிரிவு :

இப்பிரிவு இத்துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்களின் கீழ் வரி விதிப்பதும், வசூலிப்பதுமான பணிகளைச் செய்கிறது. நம் மாநிலத்தில் 10 வணிகவரிக்கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் துணை ஆணையர்களின் தலைமையில் இயங்குகின்றன. இக்கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வணிகவரி மாவட்டங்கள் எனவும், சென்னை மற்றும் கோயம்புத்தூர் கோட்டங்களில் அப்பிரிவுகள்



வணிக்வரி சரகங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. இம்மாநிலத்தில் 6 விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்களை ( உதவி ஆணையர்களைத் தலைவராகக் கொண்டு சென்னையில் 4 வட்டங்களும், கோயம்புத்தூரில் 2 வட்டங்களும்) உள்ளடங்கிய 323 வரிவிதிப்பு வட்டங்கள் இயங்குகின்றன. 236 வரிவிதிப்பு வட்டங்கள் வணிகவரி அலுவலர் தலைமையிலும் 81 வரிவிதிப்பு வட்டங்கள் துணை வணிகவரி அலுவலர் தலைமையிலும் இயங்கி வருகின்றன.

II. தணிக்கைப் பிரிவு :

உட் தணிக்கைப் பிரிவு சம்பந்தப்பட்ட துணை ஆணையர்களின் வழிகாட்டுதலின்படி அனைத்து வரிவிதிப்பு தொடர்பான ஆவணங்களையும் ஆய்வு செய்கிறது. இவ்வாறாக 40 உட்தணிக்கைக் குழுக்கள் இயங்குகின்றன. கணக்காய்வுத் தலைவர் மற்றும் உட்தணிக்கைப் பிரிவு ஆகியவற்றின் ஆய்வறிக்கைகள்

மீது இணை ஆணையர் ( தணிக்கை) நடவடிக்கை எடுக்கின்றார்.

1999–2000 ஆம் ஆண்டில் இந்த உட்தணிக்கை பிரிவுகள் 49,933 இனங்களில் குறைகளை சுட்டிக் காட்டியுள்ளது. 25,399 இனங்கள் நிவர்த்தி செய்யப்பட்டன. மாநிலக் கணக்காயர் சுட்டிக்காட்டிய தணிக்கை பத்திகளில் 12,253 இனங்கள் நிலுவையில் உள்ளன. 2636 இனங்கள் நிவர்த்தி செய்யப்பட்டன.

**<u>III. செயலாக்கப் பிரிவு :</u>**

மாநிலத்தில் துணை ஆணையர் தலைமையில் 7 செயலாக்க பிரிவுகள் இயங்குகின்றன. செயலாக்கப் பிரிவில் 10 உதவி ஆணையர்களும், 15 வணிகவரி அலுவலர்களும் சம்பந்தப்பட்ட துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டில் பணியாற்றுகின்றனர். வணிகவரி சோதனைச் சாவடிகள் செயலாக்கப்பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ளன. சுற்றும் குழுக்களும் வாகனங்களை சோதனை செய்யும் பணியை மேற்கொள்கின்றன. தற்போது மாநில எல்லையில் உள்ள



31 சோதனைச் சாவடிகளையும் சேர்த்து மொத்தத்தில் 46 சோதனைச் சாவடிகள் இயங்கிவருகின்றன. 1999– 2000 ஆம் ஆண்டில் இப்பிரிவின் செயல்பாடுகள் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| (அ) மேற்கொள்ளப்பட்ட கடை தணிக்கைகள் | : | 7200 |
| உருவாக்கப்பட்ட டி3 கருத்துருக்கள் | : | 4239 |
| இணக்கத்தொகை வசூலிக்கப்பட்டவை | : | ரூ. 0.45 கோடி |
| முன்வரி வசூலிக்கப்பட்டவை | : | ரூ.10.02 கோடி |
| (ஆ)சோதனையிடப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | : | 12,60,294 |
| வசூலிக்கப்பட்ட இணக்க வரி | : | ரூ.8.32 கோடி |
| வசூலிக்கப்பட்ட முன்வரி | : | ரூ.9.09 கோடி |

(இ) தணிக்கையிடப்பட்ட திரையரங்க
காட்சிகளின் எண்ணிக்கை : 39,005

வசூலிக்கப்பட்ட
இணக்க தொகை : ரூ. 0.52 கோடி

வசூலிக்கப்பட்ட முன்வரி: ரூ.0.15 கோடி

சோதனைச்சாவடிகள் ஆய்வுக்குழு கொடுத்த அறிக்கையின் பேரில் 31.3.98 முதல் பின்வரும் சோதனை சாவடிகள் அகற்றுப்பட்டு விட்டன :—

| | |
|---|---|
| (1) ஆவடி | (9) தவிட்டுப்பாளையம் |
| (2) ஒட்டந்துறை | (10) ஒட்டன்சத்திரம் |
| (3) பல்லடம் | (11) கூட்டப்புளி |
| (4) சானாரப்பட்டி | (12) பழவூர் விலக்கு |
| (5) சாத்துார் சாலை | (13) பழவூர் கிராமம் |
| (6) ஆளியாறு | (14) சங்கனாபுரம் |
| (7) கிணத்துக்கிடவு | (15) குமாரபுரம் விலக்கு. |
| (8) கடம்பர்கோயில் | |



**IV. மேல்முறையீட்டுப் பிரிவு :**

மேல்முறையீட்டுப் பிரிவு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவரின் கீழ் இயங்கிவருகிறது. இப்பிரிவில் இருபது உதவி ஆணையர்களும், சென்னை மற்றும் கோயம்புத்துாரில் தலா ஒரு துணை ஆணையர் ( மேல்முறையீடுகள்) ஆக இரண்டு துணை ஆணையர்களும் பணியாற்றுகின்றனர். நிலுவையிலுள்ள மேல்முறையீடுகளை தீர்ப்பதில் விரைவான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 21.9.1999 அன்று வணிகவரித்துறை செயலரின் தலைமையில் மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் ஆகியோரின் பணி குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

1999–2000 ஆம் ஆண்டில் மேல்முறையீட்டுப் பிரிவு 14,900 இனங்களில் தீர்ப்பு வழங்கியுள்ளது. எஞ்சிய நிலுவையில் உள்ள

வழக்குகள் 14,780 ஆகும். தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் ரூ.215.67 கோடி வருவாய் உள்ளடக்கியதாகும்.

**V. விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் :**

மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் ஆகியோரின் தீர்ப்புகளின் மீது எழும் மேல்முறையீடுகளை விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் விசாரித்து தீர்ப்பு வழங்குகிறது. நான்கு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் பின்வரும் இடங்களில் செயல் படுகின்றன :–

(1) சென்னை ( முதன்மை ஆயம்)
(2) சென்னை ( கூடுதல் ஆயம்)
(3) கோயம்புத்தூர் ( கூடுதல் ஆயம்)
(4) மதுரை ( கூடுதல் ஆயம்).

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி தீர்ப்பாயத் தலைவராக உள்ளார். துறை உறுப்பினராக இணை ஆணையர் தரத்தில் உள்ளார். இரண்டாம் உறுப்பினராக இந்திய தணிக்கை மற்றும்



கணக்கியல் துறையைச் சார்ந்த துறையின் துணை ஆணையர் தரத்தில் உள்ளார். கூடுதல் ஆயத்திற்கு சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர் தலைமை தாங்குகிறார். ஒவ்வொரு கூடுதல் ஆயத்திலும் துறை உறுப்பினர்களாக துணை ஆணையர்களும் உள்ளனர். 1999–2000 ஆம் ஆண்டில், இத்தீர்ப்பாயம் 3156 வழக்குகளில் தீர்ப்பு வழங்கியுள்ளது. நிலுவையில் உள்ளவை 5018 ஆகும். தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் ரூ.194.85 கோடி வருவாய் கொண்டவையாகும்.

**VI. தமிழ்நாடு வரி விதிப்புச் சிறப்புத் தீர்ப்பாயம் :**

தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம், தற்போது தலைவர், துணைத்தலைவர், நீதித்துறை உறுப்பினர் மற்றும் நிருவாக உறுப்பினர் ஆக நான்கு பேர்களுடன் முழுஅளவில் இயங்கி வருகிறது. 1999–2000 ஆம் ஆண்டில் இத்தீர்ப்பாயம் வழக்குகளை பின்வருமாறு முடித்துள்ளன :–

| | அசல் மனுக்கள் | மாற்றப் பட்ட மனுக்கள் | வரி மறு ஆய்வு வழக்குகள் | | வரி மேல் முறையீட்டு வழக்குகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தீர்ப்பாயத்தில் தொடுக்கப் பட்டவை | உயர்நீதி மன்றத்தில் இருந்து மாற்றப் பட்டவை | தீர்ப்பாய த்தில் தொடுக் கப் பட்டவை | உயர் நீதி மன்றத் தில் இரு ந்து மாற்றப் பட்ட வை | |
| 1.4.99 அன்று துவக்க நிலுவை | 1698 | 88 | 493 | 2493 | 153 | 712 | 5637 |
| முடிக்கப் பட்ட இனங் கள் | 1657 | 28 | 134 | 1205 | 4 | 271 | 3299 |
| 31.3.2000 அன்று நிலுவை யில் உள்ள வை | 41 | 60 | 359 | 1288 | 149 | 441 | 2338 |



**VII. வணிகவரிப் பணியாளர் பயிற்சி மையம்,சென்னை.**

பணியாளர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தும் பொருட்டு சென்னையில் 1982–ல் தொடங்கப்பட்ட வணிகவரிப் பணியாளர் பயிற்சி மையம், வணிகவரித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. இரு உதவி ஆணையர்கள், ஒரு வணிகவரி அலுவலர் ஆகியோரும், துணை ஆணையர் ஒருவரைத் தலைவராவும் கொண்டு ஆசிரியர் பிரிவு ஒன்று இப்பயிற்சி மையத்தில் இயங்கிவருகின்றது. வணிகவரி அலுவலர்கள், துணை வணிகவரி அலுவலர்கள், உதவி வணிகவரி அலுவலர்கள் ஆகியோருக்கு இப்பயிற்சி மையம் நினைவுகூர் பயிற்சி ( Refresher courses ) அளிக்கிறது. வரி நிருவாகம் தொடர்பான சிறப்புத் தலைப்புகளின் கீழ் பல்வேறு தொடர்புடைய துறைகளில் சிறந்து விளங்கும் அறிஞர்களைக் கொண்டு விரிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உதவி வணிகவரி அலுவலர்களுக்கு 42 வேலை நாட்களும், துணை வணிகவரி அலுவலர்கள் மற்றும்

வணிகவரி அலுவலர்களுக்கு 21 வேலை நாட்களும் நினைவுகூர் பயிற்சிக் காலமாகும்.

இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு பவானி சாகர் சிவில் சர்விஸ் பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்படும் குறுகிய கால பயிற்சியைப் போன்ற ஒரு சிறப்புப் பயிற்சி இத்துறை அலுவலர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி முகாம்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இத்துடன் பணியாளர்களுக்கு கணினி பயிற்சியும் அளித்துவருகிறது.



இப்பயிற்சி மையத்தின் செயல்பாடு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :–

| யிற்சி ட்டத் ின் பயர் | 1998–99 முடிய | | 1999–2000 –ல் மட்டும் | | 1999–2000 முடிய | |
|---|---|---|---|---|---|---|
| | பயிற்சி களின் எண்ணிக்கை | பயிற்சி யாளர்களின் எண்ணிக்கை | பயிற்சி களின் எண்ணிக் கை | பயிற்சி யாளர் களின் எண்ணிக் கை | பயிற்சி களின் எண்ணிக் கை | பயிற்சி யாளர் களின் எண்ணிக் கை |
| . னைவு ர் யிற்சி | 238 | 4526 | 6 | 125 | 244 | 4651 |
| குறுகிய ால யிற்சி | 2 | 220 | 4 | 239 | 6 | 459 |
| கணினி யிற்சி | 59 | 912 | 29 | 694 | 88 | 1606 |
| மொத்தம் | 299 | 5658 | 39 | 1058 | 338 | 6716 |

## 10. வணிகவரித்துறையில் தகவல் தொழில் நுட்பம் :

வணிகவரித்துறையில் அனைத்து நிலைகளிலும் கணிப்பொறி மயமாக்குதல் வேண்டும் என்ற நோக்கத்தோடும், வெளிப்படையான நிருவாகத்தை இத்துறையில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலும்,

பெருமளவில் ஒருங்கிணைந்த கணிப்பொறி மயமாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு அதில் முதற்கட்டமாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் கோட்டங்களில் 140 வரி விதிப்பு வட்டங்கள், 18 சரக உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 9 எல்லையோர சோதனைச் சாவடிகள், தலைமைச் செயலகத்திலுள்ள அரசுச் செயலர் அலுவலகம், வணிகவரித்துறை ஆணையர் அலுவலகம் மற்றும் கணிப்பொறி மையம் ஆகிய அலுவலகங்களுக்கு ரூ.3.57 கோடி செலவில் முதற்கட்டமாக கணினி வழங்கப்பட்டது. வணிகவரித்துறை தொடர்பான பொது விவரங்கள், பதிவு செய்வதற்கான வழிமுறைகள், வரி செலுத்தும் முறை மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள பொருட்களுக்கான வரிவீதங்கள் ஆகியவற்றை," ww.tnsalestax.com" என்ற வலை தளத்தில் பொதுமக்கள் அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய தகவல் மையத்தின் மென்பொருள் குழு, கேட்பு, வசூல், நிலுவை தொடர்பான ஒரு மென்பொருள் தொகுப்பை அளிக்கும் பணியில்



ஈடுபட்டுள்ளது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

<u>11. வருவாய் வசூல் நிலை :</u>

1999–2000 ஆம் நிதியாண்டில், பின்னடைவு மற்றும் பொருளாதாரத் தேக்கநிலை இருந்தபோதிலும், இத்துறையின் அயராத முழு முயற்சியால் 7380.65 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.

1. இத்துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின் கீழ், கடந்த 1995–96 முதல் 1999–2000 ஆண்டுகளில் வசூல் செய்யப்பட்ட வருவாய் நிலை பின்வருமாறு :–

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959.

| ஆண்டு | மொத்த வரவு ( ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995–96 | 4,118.57 |
| 1996–97 | 4,717.19 |
| 1997–98 | 4,963.06 |
| 1998–99 | 5,455.46 |
| 1999–2000 | 6,185.37 * |

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

(ஆ) மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956.

| ஆண்டு | மொத்த வரவு ( ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995–96 | 590.63 |
| 1996–97 | 672.06 |
| 1997–98 | 706.82 |
| 1998–99 | 779.31 |
| 1999–2000 | 812.62 * |

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச்சட்டம், 1939.

| ஆண்டு | மொத்த வரவு ( ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995–96 | 98.96 |
| 1996–97 | 107.82 |
| 1997–98 | 108.55 |
| 1998–99 | 90.95 |
| 1999–2000 | 86.01 * |

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.



(ஈ) தமிழ்நாடு குதிரைப்பந்தய வரிச்சட்டம், 1935.

| ஆண்டு | மொத்த வரவு ( ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995–96 | 6.67 |
| 1996–97 | 6.42 |
| 1997–98 | 6.52 |
| 1998–99 | 5.40 |
| 1999–2000 | 5.48 * |

* கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

(உ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச்சட்டம், 1981.

| ஆண்டு | மொத்த வரவு ( ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995–96 | 50.77 |
| 1996–97 | 60.69 |
| 1997–98 | 64.71 |
| 1998–99 | 68.85 |
| 1999–2000 | 70.60 * |

* கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

(ஊ) தமிழ்நாடு விளம்பர வரிச்சட்டம், 1983.

| ஆண்டு | மொத்த வரவு ( ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995–96 | இல்லை |
| 1996–97 | 0.05 |
| 1997–98 | இல்லை |
| 1998–99 | இல்லை |
| 1999–2000 | இல்லை |

இந்தச் சட்டத்தின் கீழ் வருவாய் ஏதும் கிடைக்கப் பெறாததால் இச்சட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(எ) தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச்சட்டம், 1990.

| ஆண்டு | மொத்த வரவு ( ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995–96 | 157.77 |
| 1996–97 | 185.96 |
| 1997–98 | 213.02 |
| 1998–99 | 182.63 |
| 1999–2000 | 220.57 * |

- கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை



2. வணிகவரித்துறையின்வருவாயும், செலவும் :–

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) | செலவு (ரூபாய் கோடியில்) | வருவாயில் செலவின் விழுக்காடு |
|---|---|---|---|
| 1995–96 | 5023.37 | 52.52 | 1.05 |
| 1996–97 | 5751.19 | 59.93 | 1.04 |
| 1997–98 | 6062.68 | 70.24 | 1.15 |
| 1998–99 | 6583.00 | 93.29 | 1.41 |
| 1999–2000 | 7380.65 * | 76.68 (டிசம்பர் 1999 வரை) | 1.03 |

*கருவூலக் கணக்குடன் சரிபார்க்கப்படாத தொகை.

12. ஏனைய சிறப்பு அம்சங்கள்

(1) இந்த 2000–2001 ஆண்டிற்கு இத்துறைக்கென பகுதி– II திட்டங்களின் கீழ் பின்வரும் பணிகளுக்கு அரசு அனுமதியளித்துள்ளது–

<u>ரூபாய் இலட்சத்தில்</u>

( I ) வணிகவரித்துறை

| | | |
|---|---|---|
| 1. | சென்னை வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள துணை ஆணையர் (வணிகவரி) அலுவலகங்களுக்கும் அவர்கள் தம் கோட்டங்களில் உள்ள வரி விதிப்பு கோட்டங்களில் உள்ள வரி விதிப்பு வட்டங்களுக்கும்( 142) கூடுதல் பதிவேடு, அடுக்ககங்கள் வழங்குதல் – | 3.55 |
| 2. | படிப்படியான முறையில் 150 வரிவிதிப்பு வட்டங்களுக்கு ரொக்கப் பெட்டகம் அளித்தல் – முதல் கட்டமாக 50 வரி விதிப்பு வட்டங்களுக்கு. | 4.00 |
| 3. | சென்னை நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் செயல்பட்டு வரும் வணிகவரி அலுவலகங்களுக்கு உள்தொலைபேசி வசதிகள் செய்து கொடுத்தல். | 0.75 |
| 4. | அரசு கட்டிடங்களில் செயல்படும் வணிகவரி அலுவலகங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல். | 10.00 |



( II ) தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம்

| | |
|---|---|
| சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்குதல். | 4.05 |

(III ) தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்

| | |
|---|---|
| திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கும், தற்போதுள்ள பணியாளர்களுக்கும் அறைகலன்கள் வாங்குதல். | 2.07 |

<u>(2) விற்பனைவரி ஆலோசனைக் குழு :–</u>

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு என்னுடைய தலைமையில் இயங்கிவருகிறது. இக்குழுவின் கூட்டம் 11.3.2000 ஆம் நாளன்று என் தலைமையில் நடைபெற்றது. வணிக கழகங்களின் சார்பாளர்கள், வணிகர்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுதொழில் மற்றும் மிகச்சிறிய தொழிற்சங்கங்களின்

பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குபெற அழைக்கப்பட்டனர். அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு ஆலோசனைகளும், கருத்துக்களும் 2000–2001 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை தயாரித்த போது கருத்தில் கொள்ளப்பட்டது.

<u>மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு :</u>

மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக்குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைவர்களாக உள்ளனர். இக்குழுக்கள் மாவட்ட அளவிலான பிரச்சனைகள் பற்றி விவாதிக்கின்றன.

<u>3.தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி சலுகைகள்</u>

(காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை) :–

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து தொழிற் பெருக்கத்திற்கு வித்திடும் வகையில் மிக பின்தங்கிய வருவாய் வட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு, வரித்தொகையைக் கைவிட அனுமதித்தும், புதிய தொழிலகங்கள், தொழில் விரிவாக்கங்கள் , நலிந்துபோன



தொழிலகங்கள், நூற்பாலைகள் போன்றவற்றிற்கு அவை செலுத்தவேண்டிய வரிகளைக் காலம் தள்ளி வட்டியின்றிச் செலுத்தும் சலுகையினையும் அரசு 22.1.2000 வரை வழங்கி வந்தது. இவ்வகையில் ஏப்ரல் 1998 முதல் மார்ச் 1999 முடிய ரூ.580.68 கோடிக்கு சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

<u>(4) உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி :–</u>

ஊள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் மொத்த தொகையில் 30 விழுக்காடு முதல் 70 விழுக்காடு வரை உள்ளாட்சி மன்றங்களின் தரத்திற்கொப்ப, மாநகராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்கு 31.3.1997 வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகத்தை மேம்படுத்த அவற்றின் வருவாய் ஆதாரங்களை அதிகரிக்கும் பொருட்டு 1.4.97 முதல் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் நிதி மானியம் ஒரே சீராக 90 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

1999–2000 ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 85.12 கோடி ஆகும்.

(5) குறை தீர்க்கும் குழு :–

வணிகர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கும் அமைப்பாக 1999–ஆம் ஆண்டு வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக இணை ஆணையர் (நிருவாகம்) அவர்களும், குழு உறுப்பினர்களாக இணை ஆணையர் ( சுய சீராய்வு மனு) மற்றும் இணை ஆணையர் ( மக்கள் தொடர்பு) ஆகியோரும் உள்ளனர்.

## 13. தமிழ்நாடு வணிகர் நல வாரியம் :–

வணிகர்களுக்கு உதவும் நோக்கத்துடன் 1989–ல் தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அரசால் அமைக்கப்பட்டது. பின்னர் இவ்வாரியம் 1997–ல் என்னைத் தலைவராகவும், அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர் அல்லாதோரையும் உறுப்பினர்களாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்டது. இந்த வாரியத்தின்



செயல்பாடு பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:–

| திட்டத்தின் பெயர் | 1998–99 முடிய | | 1999–2000 ல் மட்டும் | | 1999–2000 முடிய | |
|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட தொகை ரூபாய் | பயன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூபாய் | பயன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூபாய் | பயன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை |
| 1. குடும்ப உதவித் திட்டம் | 10,25,000 | 36 | 20,80,000 | 44 | 31,05,000 | 80 |
| 2.மருத்துவ உதவித் திட்டம் ( சிறு நீரகம்./ இருதயம் அறுவை சிகிச்சை) | 83,000 | 5 | 1,83,000 | 8 | 2,66,000 | 13 |
| 3.. கல்வி உதவித் திட்டம் | 46,000 | 23 | 60,000 | 26 | 1,06,000 | 49 |
| 4.தீ விபத்து நிவாரணம் | 1,10,000 | 23 | 15,000 | 3 | 1,25,000 | 26 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5.மாண வர் மதிப் பெண் ஊக்கத் திட்டம் | 20,000 | 6 | இல்லை | இல்லை | 20,000 | 6 |
| மொத்தம் | 12,84,000 | 93 | 23,38,000 | 81 | 36,22,000 | 174 |

இதுவரை 29,797 வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 1989 ஆம் ஆண்டு முதல் ரூ.47,69,110/– உறுப்பினர் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த அரசு ரூ.35,49,000/– மானியம் வழங்கியுள்ளது. 30.6.99 அன்று, அரசின் தலைமைச் செயலரால் துவக்கிவைப்பட்ட



வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள வணிகர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம், தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

- திருக்குறள்.

(பொருளுரை : – முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயை பெருக்கி, அதை பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்).

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.